கட்டடங்களில் இருந்து வருகின்றன. இது தவிர இன்னும் மூன்று திட்டங்களும் பரிசீலனையிலுள்ளன.

Three proposals costing Rs. 50 lakhs, Rs. 274 lakhs and Rs. 19·5 lakhs proposed by Industries Department, State Housing Board and State P.W.D. Department.

இப்படி நான்கு திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. எந்தத் திட்டம் முடிவாக எடுக்கப்படும் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

பழவாறு நீர் இறைப்புத் திட்டம்.

* 347 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாயூரம் தொகுதி, தலைஞாயிறில் பழவாற்றில் "பம்ப்பிங் ஸ்கீம்" வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டதா ?

(இ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்ட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(இ) செலவு இப்போது ரூ. 2·64 லட்சமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இம்மாதிரித் திட்டங்கள் எங்கெங்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும், அதற்கான எஸ்டிமேட் தொகை மொத்தமாக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது அரசாங்கத்தால் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளைப் போட்டு பழக்கப்பட்டவர்கள். மூலக் கேள்வி குறிப்பிட்ட ஒரு பணியைப் பற்றிய கேள்வியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தத் துணைக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் திட்டவட்டமான பதிலுக்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணைக் கேள்விகள் மூலக் கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்டதாக கேட்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS